# Asylum Support Partnership help and advice

March 2011 Tamil

# நீங்கள் ஆதரவற்றவரா மற்றும் அடைக்கல நடைமுறையின் இறுதிக் கட்டத்தில் இருப்பவரா?

உங்கள் அடைக்கல விண்ணப்பத்தை யூகே எல்லை முகமை (UK Border Agency - UKBA) நிராகரித்துவிட்டதா? உங்கள் அடைக்கலம் தொடர்பான கோரிக்கைகளில் நீங்கள் வெற்றி பெறவில்லையா? நீங்கள் அரசின் ஆதரவைச் சார்ந்துள்ளவராக இருப்பின் - யூகே எல்லை முகமை (UKBA), UKBA உங்களுக்கு ஆதரவு அளிப்பதை நிறுத்திவிட்டிருக்கக்கூடும். அடைக்கலம் நாடுவோருக்கு மேற்கொண்டு கோரிக்கை அளிப்பதற்கான உரிமைகள் இல்லாது போகும்போது, அவர்கள் UKBA-வினால் முன்னாள் அடைக்கலம் நாடுவோராகக் கருதப்படுகின்றனர்.

பொதுவாக, நீங்கள் சுயமாக யூகேயைவிட்டு வெளியேற வேண்டுமென்று அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர், அல்லது உங்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகளை அவர்கள் செய்வார்கள். UKBA-வினால் உங்களை உடனடியாக யூகேயிலிருந்து அனுப்ப முடியாவிட்டால், தங்குமிடம் மற்றும் நிதி உதவியின்றி இருக்கும் நிலைமை உங்களுக்கு ஏற்படக்கூடும்.

இது நிகழுமானால், 'பிரிவு 4 உதவி' ('Section 4 support') என்று அழைக்கப்படும், மிகக் குறைந்த அளவிலான உதவி ஏற்பாட்டை பெறுவதற்காக நீங்கள் UKBA-விற்கு விண்ணப்பிக்கலாம். இந்த ஆதரவு முக்கியமாகக் குழந்தைகள் இல்லாத முன்னாள் அடைக்கலம் நாடுவோருக்கு அளிப்படுவதாகும். 18 வயதுக்கும் குறைவாக உள்ள குழந்தைகளுடன் இருக்கும் அடைக்கலம் நாடுவோருக்கு, அவர்கள் யூகேயைவிட்டு வெளியேறும்வரை தொடர்ந்து ஆதரவு அளிக்கப்படும்.

## பிரிவு 4 உதவி என்றால் என்ன?

உங்களுக்கு பிரிவு 4 உதவி பெறுவதற்கான தகுதி இருக்குமானால், சுய சமையல் தங்குமிட வசதி மற்றும் உணவு, சுகாதாரப் பொருட்கள் போன்ற அடிப்படைப் பொருட்களுக்கான 'Azure' அட்டை ஆகியவற்றை UKBA உங்களுக்கு வழங்கும். பணம் எதுவும் வழங்கப்படமாட்டாது. உங்கள் வாராந்திர உதவியானது, Azure பணமளிப்பு அட்டையில் சேர்க்கப்பட்டுவிடும். Azure அட்டையை அவசியமான பொருட்கள், உதாரணமாக, உணவு, சுகாதாரப் பொருட்கள், சுத்திகரிப்பு பொருட்கள் போன்றவற்றை வாங்குவதற்காக Asda மற்றும் Tesco உள்ளிட்ட குறிப்பிட்ட சில கடைகளில் பயன்படுத்திக் கொள்ள முடியும். Azure பணமளிப்பு அட்டை பற்றிய மேலும் விவரங்களுக்கு 'பிரிவு 4 உதவி Azure பணமளிப்பு அட்டை' என்ற தலைப்பிலான கையேட்டை பின்வரும் வலைத்தளத்தில் காணவும்: http://languages.refugeecouncil.org.uk/english/summary.htm#26

லண்டனுக்கு வெளியே புறநகர்ப்பகுதி ஒன்றில் நீங்கள் தங்க வைக்கப்படும் சாத்தியமுள்ளது. தங்குமிடவசதிக்கான ஒரு வாய்ப்பை மட்டுமே நீங்கள் பெறுவீர்கள் மற்றும் நீங்கள் ஏதேனும் காரணத்திற்காக இந்த வாய்ப்பை மறுத்துவிட்டால், UKBA உங்களுக்கு வழங்கும் உதவியை



Asylum Support Partnership is a partnership project hosted by the British Refugee Council
British Refugee Council, (commonly called the Refugee Council) is a company limited by guarantee registered in England and Wales, [No 2727514] and a registered charity, [No 1014576].
Registered office: 240-250 Ferndale Road, London SW9 8BB, United Kingdom, VAT no: 936 519 988

நிறுத்திவிடக்கூடும். சில விதிவிலக்கான நிகழ்வுகளில் மட்டும், பிரிவு 4 உதவியின் மூலம் ஆதரவு பெறும் அடைக்கலம் நாடுவோர், அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு அருகாமையில் மாற்றப்படக்கூடும்.

தங்குமிடத்தை நீங்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கலாம். சில பிரத்யேகக் காரணங்களுக்காக பகிர்ந்து கொள்வது உங்களுக்கு பொருந்துவதாக இல்லாவிட்டால், அவற்றை எழுத்து மூலமாக நீங்கள் UKBA-விற்கு தெரிவிக்க வேண்டும்.

## பிரிவு 4 உதவிக்கான விதிமுறைகள் யாவை?

பிரிவு 4 உதவியை உங்களுக்கு அளிப்பது குறித்து முடிவெடுப்பதில் கடுமையான விதிமுறைகளை UKBA பின்பற்றுகிறது. இவ்விதிமுறைகளில் முதலாவதாக இருப்பது நீங்கள் ஆதரவற்றவராக இருப்பது, அதாவது, உங்களுக்கு தங்குமிட வசதி மற்றும்/அல்லது உணவு பெறுவதற்கான வழிகள் ஏதுமில்லை என்பதாகும். இதுவரை உங்களை நீங்கள் எவ்விதம் பாதுகாத்து வந்துள்ளீர்கள் என்பதை நீங்கள் விளக்குவதுடன், அதனை உறுதிப்படுத்துவதற்கான சில சான்றுகளையும் நீங்கள் அளிக்க வேண்டியிருக்கும்.

பின்வரும் விதிமுறைகளில் **ஒன்றையேனும்** நீங்கள் பூர்த்தி செய்வதை நீங்கள் உறுதிசெய்ய வேண்டும்:

1. நீங்கள் யூகேயைவிட்டு வெளியேறுவதற்கான நியாயமான முயற்சிகளை மேற்கொண்டிருப்பது அல்லது அவ்வாறு செய்வதற்கான நிலையில் உங்களை நீங்கள் அமர்த்திக் கொண்டிருப்பது அவசியம்.
2. அல்லது உங்கள் நாட்டிற்கு பயணம் மேற்கொள்வதற்கு உங்கள் உடல்நிலை தடையாக இருந்ததால், உங்களால் யூகேயைவிட்டு வெளியேற முடியாமல் இருந்திருக்க வேண்டும், உதாரணம், நோயுற்ற நிலை அல்லது காலங்கடந்து கருவுற்றிருத்தல்.
3. அல்லது நீங்கள் விண்ணப்பம் செய்திருந்து, உங்கள் அடைக்கல விண்ணப்பத்தை நிராகரித்த UKBA-வின் முடிவை எதிர்த்து நீதித்துறை மறுஆய்வுக்காக நீங்கள் உயர்நீதி மன்றத்திற்கு (High Court) செல்ல அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். ஸ்காட்லாந்தில் நீங்கள் நீதித்துறை மறுஆய்வுக்காக விண்ணப்பத்திருப்பதை காட்டினால் மட்டும் போதுமானது என்பதை கவனத்தில் கொள்ளவும். அடைக்கலத்திற்கான புதிய கோரிக்கை போன்ற UKBA-விடம் நிலுவையிலுள்ள கோரிக்கைகளும் உங்களுக்கு இருக்கலாம்.
4. அல்லது திரும்பச் செல்வதற்குப் பாதுகாப்பான வழித்தடம் இல்லாத காரணத்தால் உங்களால் பயணம் செய்ய முடியாமல் இருப்பது. UKBA-வின்படி இந்த விவாதம் தற்போது எந்தவொரு நாட்டிற்கும் பொருந்தாது. உங்கள் சட்டப் பிரதிநிதி அல்லது உதவி மற்றும் ஆலோசனை சேவையின் (One Stop Service) ஆலோசனையாளரால் இது மாறியுள்ளதா என்பதை உங்களுக்குக் கூறமுடியும்.
5. அல்லது உங்கள் மனித உரிமைகள் மீறப்படுவதை தவிர்ப்பதற்காக தங்குமிட வசதி அளிப்பது அவசியமாக இருத்தல். உதாரணமாக, நீங்கள் புதிதாக ஒரு அடைக்கல விண்ணப்பம் அளித்திருந்து, அந்த விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் உங்களுடைய முந்திய விண்ணப்பத்தில் உள்ளவற்றிலிருந்து வேறுபட்டு இருந்தால், பிரிவு 4 உதவி வழங்கப்பட வேண்டும்.

பிரிவு 4 உதவிக்கான ஒவ்வொரு விண்ணப்பத்தின் தனித்தனி தகுதிகளை UKBA கருத்தில் கொள்வதுடன், என்ன காரணத்திற்காக உங்களால் தாய்நாட்டிற்கு திரும்ப முடியவில்லை அல்லது பயணம் மேற்கொள்ள முடியவில்லை என்பதற்கான ஆவணச் சான்றுகளை அளிக்கும்படியும் உங்களிடம் கேட்டுக் கொள்ளும். உங்களால் ஏன் பயணம் மேற்கொள்ள இயலாது என்பதை விளக்கி மருத்தவர் அளிக்கும் ஒரு கடிதமாகவோ அல்லது உயர்நீதி மன்றத்தில் நீதித்துறை மறுஆய்வுக்கான அனுமதியை நீங்கள் பெற்றிருப்பதற்கான எழுத்துமூலச் சான்றாகவோ இது இருக்கக்கூடும்.

## பிரிவு 4 உதவிக்காக நான் எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?

பிரிவு 4 உதவிக்கு விண்ணப்பிக்கும் அடைக்கலம் நாடுவோருக்கு இரண்டு விண்ணப்பப் படிவங்கள் உள்ளன. பிரிவு 4 உதவிக்கான விண்ணப்பப் படிவங்கள் பின்வரும் வலைத்தளத்தில் கிடைக்கின்றன:
http://www.ukba.homeoffice.gov.uk/asylum/support/apply/section4/
உங்கள் உள்ளூர் உதவி மற்றும் ஆலோசனைச் சேவை (One Stop Service) அமைப்பை நீங்கள் தொடர்பு கொண்டால், நீங்கள் எந்த படிவத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பது குறித்து ஆலோசனை வழங்குவதுடன், பொருத்தமான படிவத்தை பூர்த்தி செய்வதற்கும் அவர்கள் உங்களுக்கு உதவுவார்கள். உதவி மற்றும் ஆலோசனை சேவை அமைப்பின் ஆலோசனையாளர் ஒருவர் உங்கள் விண்ணப்பப் படிவத்தை UKBA-வின் பார்வைக்கு அனுப்பி, எடுக்கப்பட்ட முடிவு குறித்து உங்களுக்கு தெரிவிப்பார். உங்களுக்கு தேவைப்படும் பிற உதவிகள், உதாரணமாக, உங்கள் தங்குமிடத்திலிருந்து நீங்கள் ஆஜராக வேண்டிய மையத்திற்கு செல்வதற்கான பயணச் செலவுகள், பற்றிய விவரங்களையும் அவர்களால் அளிக்க முடியும். உங்களுக்கு மிக அருகாமையில் உள்ள உதவி மற்றும் ஆலோசனை சேவைகளை எப்படிக் கண்டுபிடிப்பது என்பதற்கான
விவரங்களுக்கு, இச்சிற்றேட்டின் இறுதிப்பகுதியைப் பார்க்கவும்.

உதவி மற்றும் ஆலோசனை சேவையைத் தவிர, உங்கள் சட்டப் பிரதிநிதி, உள்ளூர் சட்ட மையம், குடிமக்கள் ஆலோசனை (Citizens Advice) அல்லது அகதிகள் சமூக அமைப்பு ஆகியவையும் பிரிவு 4 உதவிக்கு நீங்கள் விண்ணப்பிப்பதற்கு உதவக்கூடும்.

நீங்கள் பெற்றுவந்த முந்தைய உதவியை நிறுத்திவிட்டதற்கான கடிதத்தை UKBA-விடமிருந்து பெற்ற உடனேயே நீங்கள் பிரிவு 4 உதவிக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

பிரிவு 4 உதவி பெறுவதற்கான விதிமுறைகளை நீங்கள் புரிந்து கொண்டுவிட்டதை உறுதிப்படுத்தும் வகையில், விண்ணப்பப் படிவத்தில் நீங்கள் கையெழுத்திட வேண்டும்:

- பிரிவு 4 உதவி, அடிப்படை தங்குமிட வசதியைக் கொண்டுள்ளது.
- பொதுவாக லண்டனின் புறநகர்ப் பகுதியில்தான் UKBA தங்குமிட வசதியை அளிக்கும், அதாவது, நீங்கள் லண்டனிலேயே தங்க வைக்கப்பட வேண்டுமென்பதற்கான விசேஷ சூழ்நிலைகள் இருந்தால் தவிர, நீங்கள் இடமாற்றம் செய்ய வேண்டியிருக்கும் என்பதையே இது குறிக்கிறது.
- பிரிவு 4 உதவி பெறுவதற்கான தகுதி உங்களுக்கு இன்னமும் உள்ளதா என்பதை UKBA தொடர்ந்து மறுஆய்வு செய்துவரும்.
- பிரிவு 4 உதவியை நீங்கள் பெற்ற நிலையில், அதிகாரிகள் உங்களிடமிருந்து நியாயமான விவரங்களைக் கோருவார்களானால், நீங்கள் அத்தகைய கோரிக்கைக்கு உடன்பட வேண்டும்.

உங்கள் விண்ணப்ப பரிசீலனை வெற்றியடைந்தால், உங்கள் தங்குமிட வசதிக்கு ஏற்பாடு செய்வதற்கு UKBA சில நாட்கள் எடுத்துக் கொள்ளக்கூடும், மற்றும் உங்கள் தங்குமிடத்திற்கு நீங்கள் பயணம் செய்வதற்கான பயணச் சீட்டையும் அவர்கள் உங்களுக்கு அனுப்பி வைப்பார்கள்.

## பிரிவு 4-ன் கீழ் எத்தனை காலத்திற்கு எனக்கு உதவி கிடைக்கும்?

பிரிவு 4 உதவி பெறுவதற்கான உங்கள் தகுதி குறித்து UKBA தொடர்ந்து மறுஆய்வினை மேற்காண்டு வரும். உங்கள் சூழ்நிலைகள் மாறியுள்ளனவா என்பதையும், நீங்கள் யூகேயைவிட்டு வெளியேறுவதற்கு இன்னமும் தடைகள் உள்ளனவா என்பது குறித்தும் அவர்கள் பரிசீலிப்பார்கள்.

## பிரிவு 4 உதவிக்கான என்னுடைய விண்ணப்பம் வெற்றி பெறவில்லை என்றால் என்ன நடக்கும்?

பிரிவு 4 உதவி பெறுவதற்கான உங்கள் விண்ணப்பத்தை UKBA நிராகரிக்குமானால், இம்மறுப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்வதற்கு உங்களுக்கு தகுதி உண்டு, மற்றும் இந்த மேல் முறையீட்டில் ஓர் உதவி மற்றும் ஆலோசனை சேவை உங்களுக்கு உதவும். மிகக் குறுகிய கால வரம்பிற்குள் நீங்கள் இந்த மேல் முறையீட்டைச் செய்ய வேண்டும்.

கடந்த முறை நீங்கள் பிரிவு 4 உதவிக்காக விண்ணப்பம் செய்ததிலிருந்து உங்கள் சூழ்நிலைகள் மாறியிருந்தால், நீங்கள் மீண்டும் விண்ணப்பிக்கலாம். உங்கள் அடைக்கல விண்ணப்பத்திற்கு ஆதரவாக உங்களிடம் புதிய சான்று ஏதேனும் இருக்கும் சூழ்நிலையிலும் நீங்கள் மறுவிண்ணப்பம் அளிக்கலாம். நீங்கள் உண்மையில் ஆதரவற்றவர்தானா என்பதை UKBA சரிபார்ப்பதுடன், நீங்கள் கடந்த முறை விண்ணபித்திலிருந்து எவ்விதம் வாழ்க்கையை சமாளித்து வருகிறீர்கள் என்பது குறித்தும் உங்களிடம் அது கேட்கும்.

## கிடைக்கக்கூடிய மற்ற உதவிகள் யாவை?

உங்களுக்கு உடல்ரீதியான அல்லது அறிந்து கொள்வதில் சிரமங்கள், கேட்பதில் மற்றும் பார்வையில் குறைபாடுகள், மனநல பாதிப்புகள் அல்லது நாட்பட்ட உடல்நலக்குறைவு போன்றவை இருக்குமானால், உங்கள் உள்ளூர் அதிகார சமூக சேவைகள் (social services) துறையிடமிருந்து உங்களுக்கு உதவி கிடைக்குமா என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். நீங்களோ அல்லது உங்கள் சார்பாக வேறொரு நபரோ, ஒரு சமுதாய பராமரிப்புத் தேவைகள் மதிப்பீட்டிற்காக உள்ளூர் அதிகார சமூக சேவைகள் துறையைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

மேற்கொண்டு முறையீடு செய்வதற்கான உரிமைகள் ஏதுமின்றி, உங்கள் அடைக்கல நடைமுறையின் இறுதிக்கட்டத்தில் நீங்கள் இருந்து, பிரிவு 4 உதவியும் உங்களுக்கு மறுக்கப்பட்டு, உங்களை பராமரித்துக் கொள்வதற்கான வழிமுறைகள் ஏதும் உங்களுக்கு இல்லாத நிலையில், நீங்கள் அறக்கொடைகளிடமிருந்து உதவி கோரலாம். சில நிகழ்வுகளில், அகதி சமுதாயம் அல்லது நம்பிக்கை குழுக்கள் போன்ற உள்ளூர் சமுதாய அமைப்புகள் சூடான உணவுகள், உணவு பார்சல்கள், சுகாதார பொருட்கள் அல்லது உடைகளை அளித்து உதவக்கூடும்.

எந்த அறக்கொடை அமைப்புகள் இத்தகைய உதவியை வழங்குகின்றன என்பதை அறிந்து கொள்வதற்கு, உங்களுக்கு அருகாமையில் உள்ள உதவி மற்றும் ஆலோசனை சேவை, உள்ளூர் செஞ்சிலுவை (Red Cross) அலுவலகம், குடிமக்கள் ஆலோசனை அல்லது உள்ளூர் ஆலோசனை மையம் ஆகியவற்றை நீங்கள் தொடர்பு கொள்ளலாம். அல்லது தொடர்புக்கான விவரங்களைப் பெறுவதற்கு நீங்கள் பொது நூலகத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்விதங்களில் ஆதரவற்ற நிலையை அடைந்துள்ள அடைக்கலம் நாடுவோருக்கு உதவும் பொருட்டு, உங்கள் உள்ளூர் அதிகாரிகள் ஒரு சேவை அமைப்பை நிறுவியிருக்கக்கூடும்.

## உதவி மற்றும் ஆலோசனை சேவைகள்

அகதி அறக்கொடைகளான வட இங்கிலாந்து அகதி சேவை (North of England Refugee Service), அகதி நடவடிக்கை (Refugee Action), அகதிக் குழு (Refugee Council), ஸ்காட்லாந்து அகதிக் குழு (Scottish Refugee Council) மற்றும் வேல்ஸ் அகதிக் குழு (Welsh Refugee Council) ஆகியவையே அடைக்கலம் நாடுவோர் மற்றும் அகதிகளுக்கு உதவியும், ஆலோசனையும் வழங்கும் முக்கிய அமைப்புகளாகும். இந்த அமைப்புகள், யூகேயில் பல்வேறு பகுதிகளில் உள்ள தங்களது உதவி மற்றும் ஆலோசனை சேவைகள் மூலம், தங்குமிட வசதி, பிழைப்புத்தொகை உதவி, அடைக்கலம், உடல்நலம் மற்றும் இதர அம்சங்கள் குறித்த தகவல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்குகின்றன.

உங்கள் பகுதியிலுள்ள உதவி மற்றும் ஆலோசனை சேவைகளின் தொடர்புக்கான விவரங்களை பின்வரும் வலைத்தளத்தில் காணலாம்: http://languages.refugeecouncil.org.uk/english/services.htm

Asylum Support Partnership consists of:

North of England Refugee Service, charity number: 1091200 www.refugee.org.uk
Refugee Action, charity number: 283660 www.refugee-action.org.uk
Refugee Council, charity number: 1014576 www.refugeecouncil.org.uk
Scottish Refugee Council, charity number: SC008639 www.scottishrefugeecouncil.org.uk
Welsh Refugee Council, charity number: 1102449 www.welshrefugeecouncil.org